# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2263 - 2022 ජනවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.13

*2263ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 46 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 46 | ஏல விற்பனைகள் | 50 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, சனவரி மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

45 - B 082307 - 405 (2022/01)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்- களுவாஞ்சிக்குடி

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஆற்று மணல் 20 கியூப் மற்றும் ஊத்த மண் 40 கியூப் என்பன 2022.01.22 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்ற பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

கே. ஜீவராணி,
சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்.

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி,
2021. 12.31.

ஏலவிற்பனை பொருட்பட்டியல்

| தொடர் இல. | வழக்கிலக்கம் | பொருள் | அளவு |
|---|---|---|---|
| 1. | - | ஆற்ற மணல் | 20 கியூப் |
| 2. | - | ஊத்த மண் | 40 கியூப் |

1-72

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### ஒன்றிணைத்தல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்
மாஸ் அக்டிவ் ( பிரைவட்) லிமிட்டட் ஆகிய நிறுவனம் டீ எம் லங்கா ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

மாஸ் அக்டிவ் ( பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 2990) ஆகிய நிறுவனம் டீ எம் லங்கா ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 19644) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007 ஆம்ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) (அ) பிரிவின் நியதிகளின் கீழ் 2021, திசெம்பர் 10 ஆந் திகதி கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப 2021, திசெம்பர் 10 ஆந் திகதி

சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள் , 2021, திசெம்பர் 10 ஆந் திகதியில் இருந்து மாஸ் அக்டிவ் பிரைவட்) லிமிட்டட் என தொடரும்.

சபையின் கட்டளைப்படி,

மாஸ் அக்டிவ் (பிரைவட்) லிமிட்டட்,

செயலாளர்கள்.

01- 67

---

**கம்பனியின் பெயர் நிலை மாற்றல் அறிவித்தல்**

லங்கா கிரெடிட் அன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் லிமிட்டெட் - PB 222

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனியின் நிலையை மாற்றுவதற்கான நிறுவனத்தின் சிறப்புத் தீர்மானத்தின் பிரகாரம் லங்கா கிரெடிட் அன்ட் பிஸினஸ் பினான்ஸ் லிமிட்டெட் என்பதை 2021, திசெம்பர் 13ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் லங்கா கிரெடிட் அன்ட் பிஸினஸ் பினான்ஸ் பீஎல்சீ என மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். செக்கடேரியல் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிடெட்,
பணிப்பாளர்.

01-102

---

**பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட்**
**பொது அறிவித்தல் [PV 660]**

சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் பீனிக்ஸ் வென்சர்ஸ் (கம்பனி பதிவெண் PV 807 PB) உடன் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவெண் PV 660) இன் முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பிற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட (சட்டம்) 242 ஆம் பிரிவின் (3) (b) ஆம் உப பிரிவின் பிரகாரமான பொது அறிவித்தல்

கம்பனிச் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் உடன் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஐ ஒன்றிணைப்பதற்காகவும் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆனது ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியாக தொடர்ந்து செயல்படவும் பீனிக்ஸ் பிளான்டேசன் ( பிறைவட்) லிமிட்டட் இின் சபையும் பீன்க்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர் சபையும் 2021, நவெம்பர் 16 ஆந் திகதி தீர்மானித்துள்ளது.

கம்பனிச் சட்டம் 243 ஆம் பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களுடன் உத்தேசிக்கப்பட்ட கம்பனி ஒன்றிணைப்பிற்கான ஆவணங்களையும் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆகியவை, பதிவிற்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்துடன் கோவை செய்ததன் பிரகாரம் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 20 வேலை நாட்களிற்குக் குறையாத காலப்பகுதிக்குள் கம்பனிகளின் பதிவாளர் நாயக சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்றிணைப்பு சான்றிதழை வழங்கிய பின்னர் , ஒன்றிணைப்பானது செயல்வலுப்பெறும்.

பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆகியவற்றின் சபைகளிளால் ஒன்றிணைப்பை அங்கீகரிக்கும் தீர்மானங்களை அடக்கியுள்ளதாக கருதப்படும் ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதிகள் சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு பங்குதாரர் அல்லது கம்பனியின் கடன் கொடுநர் அல்லது கம்பனி கடப்பாடுடைய எந்தவொரு நபர் ஆகியோரும் பரீட்சிப்பதற்காக சாதாரண வேலை நேரங்களில் கொழும்பு 3, ரெயின்லண்ட் பிளேஸ், 25ஆம் இலக்கத்திலுள்ள கம்பனியின் பதிவு அலுவலகத்தில் பரீட்சித்தலுக்காக வைக்கப்படடுள்ளன.

கம்பனியின் ஒரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனி கடப்பாடாகவுள்ள எந்தவொரு நபரும் கம்பனிக்கு கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கம்பனி ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதியொன்றை இலவசமாக பெற்றுக்கொள்ள உரித்தாவார்.

பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் இன்
சபையின் கட்டளைப் பிரகாரம்,

பி டபிள்யூ கோர்ப்பரேட் செக்கிரட்டேரியல்
(பீவீடி) எல்டிடீ,

செயலாளர்கள்.

2022, சனவரி 07.

01- 115/1

---

**பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் பொது அறிவித்தல் [PV 807PB]**

சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் பீனிக்ஸ் வென்சர்ஸ் (கம்பனி பதிவெண் PV 807 PB) உடன் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவெண் PV 660) இன் முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பிற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட (சட்டம்) 242 ஆம் பிரிவின் (3) (b) ஆம் உப பிரிவின் பிரகாரமான பொது அறிவித்தல்

கம்பனிச் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் பீனிக்ஸ் வென்சர்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் உடன் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஐ ஒன்றிணைப்பதற்காகவும் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆனது ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியாக தொடர்ந்து

செயல்படவும் பீனிக்ஸ் பிளாண்டேசன் (பிறைவட்) லிமிட்டட் இன் சபையும் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர் சபையும் 2021, நவெம்பர் 16 ஆந் திகதி தீர்மானித்துள்ளது.

கம்பனிச் சட்டம் 243 ஆம் பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களுடன் உத்தேசிக்கப்பட்ட கம்பனி ஒன்றிணைப்பிற்கான ஆவணங் களையும் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆகியவை, பதிவிற்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்துடன் கோவை செய்ததன் பிரகாரம் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 20 வேலை நாளிற்குக் குறையாத காலப்பகுதிக்குள் கம்பனி களின் பதிவாளர் நாயகச் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்றிணைப்பு சான்றிதழை வழங்கிய பின்னர், ஒன்றிணைப்பானது செயல்வலுப்பெறும்.

பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆகியவற்றின் சபை களினால் ஒன்றிணைப்பை அங்கீகரிக்கும் தீர்மானங்களை அடக்கியுள்ளதாக கருதப்படும் ஒன்றிணைப்பு தீர்மானத் தின் பிரதிகள் சட்டத்தின் 242(4)ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு பங்குதாரர் அல்லது கம்பனியின் கடன்கொடுநர் அல்லது கம்பனி கடப்பாடுடைய எந்தவொரு நபர் ஆகியோரும் பரீட்சிப்பதற்காக சாதாரண வேலை நேரங்களில் கொழும்பு 3, ரெயின்லண்ட் பிளேஸ்,25 ஆம் இலக்கத்திலுள்ள கம்பனியின் பதிவு அலுவலகத்தில் பரீட்சித்தலுக்காக வைக்கப்பட்டுள்ளன.

கம்பனியின் ஒரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனி கடப்பாடாகவுள்ள எந்தவொரு நபரும் கம்பனிக்கு கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கம்பனி ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதியொன்றை இலவசமாக பெற்றுக்கொள்ள உரித்தாவார்.

பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் இன் சபையின் கட்டளைப் பிரகாரம்,

பி டபிள்யூ கோர்ப்பரேட்
செக்கிரட்டேரியல்
(பீவீடி) எல்டிடீ,

செயலாளர்கள்.

2022, சனவரி 07.

01- 115/2

---

## ஒன்றிணைத்தல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஃப்ருடன்பர்க் என்ட் விலென் இன்டர்நெஷனல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் ஆகிய நிறுவனம் ஃ ப்ருடன்பர்க் அபரல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

ஃப்ருடன்பர்க் என்ட் விலென் இன்டர்நெஷனல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 8802) ஆகிய நிறுவனம் ஃ ப்ருடன்பர்க் அபரல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PV 18003) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்ப தோடு 2007 ஆம்ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(அ) பிரிவின் நியதிகளின் கீழ் 2021, திசெம்பர் 01ஆந் திகதி கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப 2021, திசெம்பர் 01 ஆந் திகதி சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது. மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள் , 2021, திசெம்பர் 01 ஆந் திகதியில் இருந்து ஃப்ருடன் பர்க் அபரல் லங்கா (பிரைவட்) லிமிட்டட் என தொடரும்.

ஃ ப்ருடன்பர்க் அபரல் லங்கா
(பிரைவட்) லிமிட்டட் ,

பணிப்பாளர்.

01-123

---

## ஒன்றிணைத்தல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழ் பகிரங்க அறிவித்தல்

அப்பிகோ சொப்ட்ஃவெயார் (பிரைவேட் லிமிட்டட்) (கம்பனிப் பதிவிலக்கம் பீவி 7980 ) இல.50, வார்ட் பிளேஸ், கொழும்பு 7 என்ற முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டது என்பதோடு அதன் கூறப்பட்ட மூலதனத்தை நான்கு கோடியே ஐந்து இலட்சத்து முப்பது ரூபா (ரூ.40, 500, 030.00) தொகையிலிருந்து பதினைந்து இலட்சத்து பதினாறாயிரத்து தொண்ணூற்றி இரண்டு ரூபா (ரூ.1,516,092.00) தொகையாக குறைப்பதற்கு முன்மொழியப்படுகின்றது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59(2) இன் அடிப்படையில் இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப் படுகின்றது.

சபையின் கட்டளைப்படி,

பிசினஸ்மேட் (பிரைவேட்) லிமிட்டட் ,

செயலாளர்.

அப்பிகோ சொப்ட்ஃவெயார்
(பிரைவேட் லிமிட்டட்)

01-124

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட அறிவிப்பு.-*

*நிறுவனத்தின் பெயர்:* டெலன்ட்ஸ்பார்க் கன்ஸல்டிங் (ப்ரீவ்ட) எல்டீடி
*பதிவு எண் :* பிவி 00250509
*இணைக்கப்பட்ட திகதி:* 2021.12.23
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* 30/12, மாவத்கம, ஹோமாகம

செயலாளர்கள்.

*01-137*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 5, எலிபேங்க் வீதி, இல.44 என்ற முகவரியில் வசிக்கும் (தே.அ.அ.இல. 570173219V) GREGORY Sunil Marcus Marcelline ஆகிய நான், என்னால் கொழும்பு5, எல்பேங்க் வீதி, இல.44 இல் வசிக்கும் DHARINI MARIANNE GUNAWARDANA (தே.அ.அ.இல. 557702156V) என்பவருக்கு வழங்கப்பட்டதும்,கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஹேமன்த D.P. கமகே என்பவரினால் 2019.08.12ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 450 ஆம் இலக்க முடைய அற்றோணித் தத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக் கப்படுகின்றதென அறிவிக்கப்படுகின்றது.

GREGORY Sunil MARCUS MARCELLINE.

*2022.11.12.*

*01-79*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை மாவட்டத்தில், யட்டியன மெடிகல் சென்டர் திஹகொடை, கோமங்கொடை, கள்ஹேன்கொடை, இஹலவத்த அல்லது அன்னாசிவத்த எனும் முகவரியில் வசிக்கும் அம்பல கீகனகமகே ஆரியவதீ (தே.அ.அ.இல. 557132309V) ஆகிய நான், அக்குரெஸ்ஸ, பரதுவ, பஹுரன்வெல கிருவாயே கெதர எனும் முகவரியில் வசிக்கும், மலவிபுரகே பாலித புஷ்பகுமார (தே.அ.அ.இல. 773260370V) என்பவருக்கு மாத்தறை பிரசித்த நொத்தாரிசு கொட்வின் எஸ். ஜே. விதானபதிரன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4920 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவம் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றோம்.

அம்பல கீகனகமகே ஆரியவதீ.

*01- 110*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, நெடிமல, பெரகும்பா மாவத்தை, 27/40 என்ற இலக்கத்தைச் சேர்ந்த அமீர் முஹம்மத், தமீனா முஹம்மத் ஆகிய நாங்கள் நோட்டரி பப்ளிக் மாத்தறை எம். ஷிராஸ் யூஸுப் என்பவரினால் 2014.11.22 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1908 ஆம் இலக்க தெஹிவளை , நெடிமால, பெரகும்பா மாவத்தை, 27/04 என்ற முகவரியில் வதியும் துவான் நிசாம் முஹம்மத் பலீக் முஹம்மத் என்பவருக்கு எம்மால் வழங்கப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவம் இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு நீக்கப்பட்டு மற்றும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசகக் குடியரசுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றோம். மேற்கூறப்பட்ட துவான் நிசாம் முஹம்மத் பலீக் முஹம்மத் என்பவரால் எமது சார்பாக மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களையும் பொறுப்பேற்க மாட்டோம்.

அமீர் முஹம்மத் மற்றும் தமீனா முஹம்மத் .

இல.27/04,
பெரகும்பா மாவத்தை,
நெடிமால,
தெஹிவளை.
*2017.01.04.*

*01-114*

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சிலாபம் என்னுமிடத்தில் வதியும் சுரங்க பர்னாந்து பிரசித்த நொத்தாரிசு மூலம் 2018.01.10 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 17776 என்னும் இலக்கமுடைய விசேட அற்றோணித் தத்துவம் மூலம் லிஹிரியாகம, ஜயமக, முதலாவது ஒழுங்கை, இல. 165 என்னுமிடத்தில் வதியும் வர்ணகுலசூரிய ஏன் நிலுஷி பர்னாந்து என்பவரினால் லிஹிரியாகம, ஜயமக, முதலாவது ஒழுங்கை, இல. 165 என்னுமிடத்தில் வதியும் சிறிகம் பலகே தொன் துஷான் சமீர என்பவருக்கு அளிக்கப்பட்ட அனைத்து அற்றோணி அதிகாரத்தினையும் இரத்துச் செய்வதாக இத்தால் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன். இது 2018.01.24ஆந் திகதிய தி.ப. இலக்கம் 1592 இன் கீழ் 111/224 என்னும் புத்தக ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

டபிள்யூ.ஏ. என். பர்னாந்து.

*2021.12.15.*

*01-126*

### அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

ஹோமாகம, நீதிமன்ற வீதி, இல. 92/ஏ என்ற இடத்தில் வதியும் பெரும்புலி ஆராச்சிகே தீபா பிரியங்கனி (685883414V) என்பவரின் அற்றோணித் தத்துவகாரராக ஹோமாகம, நீதிமன்ற வீதி, இல. 92/ஏ என்ற முகவரியில் வதியும் பெரும்புலி அச்சிகே பந்துல பிரசன்ன (840890597V) என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த 2014, ஏப்பிறல் 30 ஆந் திகதிய வெளிநாட்டு (ஐக்கிய இராச்சியம்) அற்றோணித் தத்துவம் உடனடியாக அமுலுக்கு வருமாறு இத்தால் இரத்துச் செய்யப் படுகின்றது என்றும் மேற்படி பெரும்புலி அச்சிகே பந்துல பிரசன்ன என்பவரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாடு களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்றும் ஏதேனும் விடயங் களுக்கு நான் வகை கூற மாட்டேன் என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

பெரும்புலி ஆரச்சிகே தீபா
பிரியங்கனி.

1-130

---

### அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

கோட்டே, மாதிவல, இல. 137 என்ற முகவரியில் வசிக்கும் எதுல்துர ஆராச்சிகே லலித் கித்சிறி பெரேரா ஆகிய நான், இலங்கைப் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வதாவது எதுல் ஆராச்சிகே சுனேத்ரா சுபாஷினி பெரேரா என்பவருக்கு என்னால் அளிக்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். கே. ஹெட்டிகே அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 483 இடப்பட்ட 2015.05.08 ஆந்திகதியுடைய விசேட அற்றோணித் தத்துவத்தை என்னால் இரத்துச் செய்யப்படுவதோடு அதனால் இதிலிருந்து எதுல்துர ஆராச்சிகே சுனேத்ரா சுபாஷினி பெரேரா என்பவரினால் எனக்காக செயல்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் எவற்றுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதுல்துர ஆராச்சிகே லலித்
கித்சிறி பெரேரா.

1-142

---

### அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசகக் குடியரசு, மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில், கண்டி பேராதெனிய, தேவாலய வீதி, இல. C31 இல் தற்போது குவைட், ஜப்ரியா , 5 ஆம் தெரு, 9 ஆம் கட்டிடம், இல. 44 இல் வசிக்கும் ராஜபக்ச வதுகொடகே அசங்க ஆரியதிலக ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில், கண்டி, பேராதெனிய தேவாலய வீதி, இல. C31 இல் வசிக்கும் வடகொடகே பிரியங்கா குமாரி ரனதுங்க என்பவரை, சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு A.M. கங்காநாத அவர்களால் 2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18 ஆந் திகதி எழுதி கைச்சாத்திடப்பட்ட இல.8225 ஆம் அற்றோணிப் பத்திரத்தினூடாக என்னுடைய உண்மையான சட்ட ரீதியிலான அற்றோணிகாரராக செய்யப்பட்ட நியமனத்தை இன்று 2022, தை மாதம் 13 ஆந் திகதி திரும்பப் பெறுவதுடன் இரத்துச் செய்வதாக இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட அற்றோணி தாரரால் இல. 8225 ஆம் அற்றோணிப் பத்திரத்தினை பயன் படுத்தி இதற்கு பிறகு செய்யப்படும் சட்ட ரீதியிலான அல்லது வேறு எந்தவிதமான செயலுக்கும் நான் பொறுப்பல்ல எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜபக்ச வதுகொடகே அசங்க
ஆரியதிலக.

2022, தை மாதம் 13.

1-143

---

## ஏல விற்பனைகள்

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

1. கடன் தொடர்பு இலக்கங்கள்: 80193909, 80252310, 80371532.

2. நடைமுறைக் கணக்கு இல.79437271.

பொரலஸ்கமுவ, தெஹிவளை வீதி, நிலத்தளம், இல.67என்னும் முகவரியில் அமைந்துள்ள மொன்டலஸ் கோப்பரேஷன் லிமிட்டெட் கடன் பொறுப்புக்களுக்காக அமுனதொர குருந்துவத்த, அமுனதொர ஹல்பொத்த கும்புர மற்றும் அமுனதொர ஹல்பொத்த குருந்துவத்தயில் அமைந்துள்ள ஆதனத்தின் விற்பனை.

3.இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.10.12ஆந் திகதிய 2093ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.09.28ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்" மற்றும் 2018.09.28 ஆந் திகதிய "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும்

அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2022.02.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை ராகம்பற்றுவில் ஜா-எல பிரதேசசபை எல்லைகளுள் ஜா-எல பிரதேச செயலகப்பிரிவில் ஏகல கிராம அலுவலர் பிரிவு இல. 206 இல் ஏகலயில் அமைந்த அமுனதொர குருந்துவத்த, அமுன தொர ஹல்பொத்த கும்புர (தற்சமயம் மேட்டுநிலம்) மற்றும் அமுனதொர ஹல்பொத்த குருந்துவத்த என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஜி. குணதிலக்க தயாரித்த 2016.07.13 ஆந் திகதியிட்ட வரைபட இல. 10080 இல் துண்டு X1/B1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : எஸ்.பி. பெரேரா மற்றும் ஏனையோரின் காணியும், B. E. திசேரா மற்றும் ஏனையோரின் காணியும், ரஜின மாவத்தையும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.ஜி. குணதிலக்க தயாரித்த வரைபட இல. 9664 இல் துண்டு X1/A உம்; கிழக்கு: வரைபட இல. 5811 இல் துண்டு X2 மற்றும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஜி. குணதிலக்க தயாரித்த வரைபட இல. 9664 இல் துண்டு X1/A உம் ; தெற்கு : உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஜி. குணதிலக்க தயாரித்த வரைபட இல. 5811 இல் துண்டு X2 உம், துண்டு X1/B2 மற்றும் X1/B 3 உம் ; மேற்கு : எஸ். பி. பெரேராவினதும் ஏனையோரதும் காணியும் B. E. திசேராவினதும் ஏனையோரதும் காணியும் ரஜின மாவத்தையும் X1/B3 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 10080 இன் படி ஒரு ஏக்கர் மூன்று றூட் பதிநான்கு தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சுகள் (1ஏ. 3றூ. 14.20பே.) அல்லது ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் ஏழு நான்கு நான்கு பூச்சியம் (ஹெக்டயர்கள் 0.7440) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணிப்பதிவகத்தில் J 357/53 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ். எஸ். பி. ஏகநாயக்க,
முகாமையாளர்,
(அறவிடலும் கடன் கண்காணிப்பும்).

இலங்கை வங்கி,
தலைநகரக் கிளை,
2021.12.31.

01-70

## மக்கள் வங்கி - காத்தான்குடி கிளை

## பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழான விற்பனை*

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில், காத்தான்குடி நகர சபை எல்லைக்கு உட்பட்ட, காத்தான்குடி 03- 165 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் ,காத்தான்குடி கிராமத்தில் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலாக பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு. இது மட்டக்களப்பு காணிப் பதிவகத்தில் இல. M 0026/04 இல் பதியப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட காணித்துண்டு மீள் அளவை செய்யப்பட்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு.ஏ. சிங்கராஜா அவர்களால் 2017, திசெம்பர் 14ஆந் திகதி தயாரிக்கப்பட்ட AS/ 2017/320 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவு, காத்தான்குடி நகர சபை எல்லைக்கு உட்பட்ட, காத்தான்குடி 03, 165 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில், காத்தான்குடி 03 ஆம் வட்டாரத்தில் ஹுதா ஒழுங்கையில் வரி மதிப்பு இல. 81 இல் அமைந்துள்ளதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. ஏ. சிங்கராஜா அவர்களால் வரையப்பட்டதுமான 2017, திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட AS/ 2017/320 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள், மண் மற்றும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் : 00ஏ. 00றூ. 06பே.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் மக்கள் வங்கியின் காத்தான்குடி கிளையில் பகிங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.

**தீர்மான அறிவிப்புகளுக்காக.**- தயவு செய்து 2019, ஒற்றோபர் 17 ஆந் திகதிய டெயிலி நியுஸ், தினமின, தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**காணிக்கு செல்வதற்கான வழி.**- காத்தான்குடி மக்கள் வங்கிக் கிளையிலிருந்து கல்முனை வீதி வழியாக மட்டக்களப்பு நோக்கி சுமார் 850 மீற்றர் வரை சென்றதும், இடது புறமாக காணப்படும் மெத்தைப் பள்ளி வீதிக்குத் திரும்பி அங்கிருந்து சுமார் 225 மீற்றர் சென்றதும் மெத்தைப் பள்ளி ஒழுங்கையைக் காணலாம். அந்த வீதி வழியாக சுமார் 85 மீற்றர்கள் வரை சென்றதும் மெத்தைப் பள்ளி ஜும்ஆ மஸ்ஜித் உள்ளதை அவதானிக் முடியும். அதைத் தாண்டி ஹுதா ஒழுங்கை வரை சென்று பின்னர் அங்கிருந்து வலது புறமாக திரும்பி சுமார்

125 மீற்றர் வரை சென்றதும் குறித்த ஆதனம் இடது பக்கத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி ˙ விற்பனை விலையில் 1%(ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/ 2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்;
(4) எழுது வினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1500;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனைச் சான்றி தழுக்கான முத்திரை வரியும் ;

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல. 25/1, கோவிங்டன் வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியில் செலுத்தப்படல் வேண்டும்.

தொலைபேசி இலக்கங்கள்: 065- 2222652/065- 2222653.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே நாடு, ஒரே ஏல
விற்பனையாளர்,
130 வருட கால மகோன்னத
சேவை அனுபவம்.'

தலைமை அலுவலகம் :
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலைபேசி/பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலைபேசி/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணைய தளம்: www.sandslanka.com

1- 74

இந்த ஏல விற்பனையானது Covid -19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

**அமானா வங்கி பீஎல்சீ**

**கண்டி கிளையின் பகிரங்க ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் சட்டம்) 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

அமானா வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அப்துல் ஹமீட் அப்துல் மாலிக் மற்றும் அப்துல் ஹமீட் அமானுல்லா ஆகியோர் கடப்பாடுடையவராக அமானா வங்கி பீஎல்சீ யினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தி என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**முதலாம் விற்பனை**: 2022.02.10ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு

**ஆதன விபரம்**: மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை கண்டி நான்கு கோரளைகள் பிரதேச செயலாளர் பிரிவு, கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட, 254 மல்வத்த கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட சரனங்கர பாதையில் அமைந்துள்ள வரிப்பண இல. 32A, "த கிளேன்" (The Glen) என்று அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் P.S.P லெனகல அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2012.09.09 ஆந் திகதிய 1789 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 01 மற்றும் 02 என்று பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதுமாகும். இக்காணியானது 25.50 பேர்ச் (01 லொட், 13.04 பேர்ச் மற்றும் லொட் 02 லொட் 12.46பேர்ச்) பரப்பளவுடையது.

**ஆதனத்தை வந்தடைதல்**.-கண்டி பௌத்த இளைஞர் சங்கம் கட்டிடத்திற்கு அருகிலிருந்து சங்கராஜ மாவத்தை ஊடாக சுமார் 600 மீற்றர் வரை வந்து மல்வத்த பன்சலை வரை வந்து வலது பக்கம்திரும்பி சங்கராஜா மாவத்தைக்கு உட்பிரவேசித்து அப்பாதை யில் சுமார் 300 மீற்றர் வரை வந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஒசோ ஹோட்டல் கட்டிடம் வரை வரும் போது சொல்லப்பட்ட ஆதனத்தை இப்பாதையின் வலது பக்கம் ஹோட்டல் மென்கோ கா கார்டன் (Hotel Mango Garden) ற்கு முன் அடையாளம் காணலாம்.

**இரண்டாம் விற்பனை**: 2022.02.10ஆந் திகதி மு.ப.10.15மணிக்கு

**ஆதன விபரம்**: மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை கண்டி நான்கு கோரளைகள் பிரதேச செயலாளர் பிரிவு, கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட, மல்வத்த கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட சரனங்கர பாதையில் அமைந்துள்ள 'த கிளேன்' (The Glen) எனும் காணி 2015.09.28 ஆந் திகதிய திருத்தப்பட்ட மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் S.A. திசாநாயக்க அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2010.10.25 ஆந் திகதிய 700 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 01 என பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதுமாகும். இக்காணியானது 14.49பேர்ச் பரப்பளவுடையது.

**ஆதனத்தை வந்தடைதல்.**-கண்டி பௌத்த இளைஞர் சங்கம் கட்டிடத்திற்கு அருகிலிருந்து சங்கராஜ மாவத்தை ஊடாக சுமார் 600 மீற்றர் வரை வந்து மல்வத்த பன்சலை வரை வந்து வலது பக்கம் திரும்பி சரணங்கர மாவத்தைக்கு உட்பிரவேசித்து அப்பாதையில் சுமார் 300 மீற்றர் ஹோட்டல் மென்கோ கார்டன் (Hotel Mango Garden) வரை வந்து அப்பாதையில் வலது பக்கம் திரும்பும் போது வரிப்பணம் இல. 32 ஐ நோக்கியவாறு ஆதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2020.12.18 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2020.12.18 ஆந் திகதிய "திவயின", "டேலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு மற்றும் வேறு செலவுகள்;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 3,000.00.

கொள்முதலில் மிகுதி 90%உம், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அமானா வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: "முகாமையாளர், அமானா வங்கி பீஎல்சீ, இல.486, காலி வீதி, கொழும்பு 03.". தொலைபேசி: 011-7756000, Ext 2112 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.
தொலைபேசி இல.: 081- 2210595, 071- 8446374, 071- 4962449.

01- 99

## தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ.- மஹவெவக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

புத்தளம் மாவட்டம் தெற்கு பிட்டிகல் கோரலைமஹவெவ பிரதேச செயாளர் பிரிவு நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மட்டக்கொட்டுவெல்லா கிராம அலுவலர் பிரிவில் தோடுவாவ தெற்கு கிராமத்தில் அமைந் துள்ள "சூரியகஹவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் R. F. H. பர்னாந்து என்பவரினால் தயாரிக் கப்பட்ட 2016.10.13 ஆந் திகதிய 7091A ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1, 2 மற்றும் 3 எனும் தொடர் காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 01 றூட் 10.60 பேர்ச்சஸ் பரப்பளவானது.

இவ்வாதனம் தோடுவாவயில் தனது பதிவுக் காரியாலயம் அமைந்துள்ள "சந்தோஷம் பாம்" எனும் பெயர் மகுடத்தின் கீழ் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் தனி உரிமையாளரான தோடுவாவயைச் சேர்ந்த சாகர நிலந்த வை டெனியெல் என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி P.L.C. இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- மஹவெவ சந்தியிலிருந்து தோடுவாவ பாதையில் சுமார் 3.5 கி. மீ. தூரம் தோடுவாவ சந்தி வரை வந்து வலதுபக்கமாக திரும்பி சிலாபம் பாதையூடாக சுமார் 40 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் இடதுபக்கத்தில் பாதையின் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ் ஆதனத்தை 2022.02.07 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**-2018.09.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.09.17 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்த வேண்டும்:-

(1) கொள்முதல் விலையின் 10% ( நூற்றுக்குப் பத்து சதவீதம்);
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,000.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு

வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.- முகாமையாளர், மையப்படுத்தல் ( அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ , இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு2. தொலைபேசி: 011-2448448 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 081-2210595 - 071-8446374, 071- 4962449.

1-100

---

இந்த ஏல விற்பனையானது Covid 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

**தேசிய அபிவிருத்தி வங்கி** P.L.C. பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

தேசிய அபிவிருத்தி வங்கி P.L.C. பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பியகி கமகே சுரேஷ் சில்வா எனும் பியதி கமகே சுரெஷ் சில்வா (1 ஆம் கடன் பெறுநர்) மற்றும் பொன்னுதுரை தவமலர் எனும் பொன்னுதுரை தவமலர் கார்தியஸ் (2 ஆம் கடன் பெறுநர்) ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும் ஈட்டாளர்களாகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி P.L.C. இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 2022.02.11 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் :

சொத்து விபரம் :

**மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து**

**கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகரம் மற்றும் கடவத்சத்தர திருகோணமலை பிரதேச செயலாளர் பிரிவு, இல. 243A ஆந்தன்குளம் கிராம அலுவலர் பிரிவு ஆந்தன்குளம் கிராமத்தில் மிஹிந்துபுரயில் அமைந்துள்ள ஆந்தன்குளம் சம்பா ஒழுங்கையில் வரிப்பண இல. 690 எனும் காணி நில அளவையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள PPTRI 30 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 866 இன் மீளளவை செய்யப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட ஆந்தன்குளம் காடு எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் R. R. பாலேந்திரம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.07.01 ஆந் திகதிய 408 A ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் A எனும் அரச காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 19.7 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

**ஆதனத்தை வந்தடைதல்.**- திருகோணமலை நகரத்திலிருந்து கண்டிப் பாதையில் சுமார் 4 கி. மீ. தூரம் அநுராதபுரம் சந்தி வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி அநுராதபுரம் பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 01 கி. மீ. தூரம் சம்பா ஒழுங்கை வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி சம்பா ஒழுங்கைக்குள் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 150 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இவ்வொழுங்கையின் இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2021.04.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.03.29 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப் பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்குப் பத்து சதவீதம்) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90%, இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு

கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- முகாமையாளர், மையப்படுத்தல் (அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ., இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு-02. தொலைபேசி : 011-2448448 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 081-2210595, 071-8446374, 071-4962449.

1-101

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (ஹொரண கிளை)

பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,*

**முதலாவது ஆதன இடாப்பு**

மேல் மாகாணம்,கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை, பல்லே பத்துவ, மஹரகம மாநகர சபை எல்லையினுள் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் 531 தேபானம கிராம அலுவலர் பிரிவில், பத்தரமுல்ல- பன்னிப்பிட்டிய வீதி, தேபானமையில் அமைந்துள்ள நுககஹவத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகிரம் பெற்ற நில அளவையாளர் வை.பி.கே.கொஸ்தா அவர்களால் 2004.05.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல.349 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 1F என்ற காணியின் விஸ்தீரணம்:

(0ஏ. 0றூ. 10 பே.)

விசாலமுடைய காணியோடு, கட்டிடங்கள்,இலைகுலை, பயிர்ச்செய்கை மற்றும் அதில் அமைந்துள்ள சகலதும்.

**இரண்டாவது ஆதன இடாப்பு**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரைகம் கோரளை, உடுகஹபத்துவ, இல. 618 வகவத்த கிராம அலுவலர் பிரிவில் மற்றும் இங்கிரிய பிரதேச சபை எல்லையினுள் மற்றும் ஹொரண பிரதேச சபை எல்லையினுள் வகவத்தயில் அமைந்துள்ள ''பிறிடொன் எஸ்டேட்'' டில் லொட் 2 என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எஸ். விதாரணகே அவர்களால் 2013.09.20 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 5585 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் B என்ற காணியின் விஸ்தீரணம்:

(4ஏ. 3றூ. 26 பே.)

விசாலமுடைய காணியோடு, கட்டிடங்கள்,இலைகுலை, பயிர்ச்செய்கை மற்றும் அதில் அமைந்துள்ள சகலதும்.

இலங்கைச் சட்டத்தின் கீழ் முறையாக ஸ்தாபிக்கப்பட்ட கம்பனியான, பன்னிப்பிட்டிய, தெபானம, பொரல்ல வீதி, இல. 113 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட டபிள்யூ. யூ. செனவிரத்ன மற்றும் கம்பனி ( பிரைவட்) லிமிட்டெட் கடனாளியாக மற்றும் லக்ஷான் ஜனத் செனவிரத்ன அடகு வைப்பாளராக புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், கொமர்ஷல் பேங்க் ஒப் பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சட்டத்தின் கீழ் முறையாக ஸ்தாபிக்கப்பட்ட கம்பனியான, பன்னிப்பிட்டிய, தெபானம, பொரல்ல வீதி, இல. 113 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட டபிள்யூ. யூ. செனவிரத்ன மற்றும் கம்பனி ( பிரைவட்) லிமிட்டெட் கடனாளியாக மற்றும் விஜித உதயகாந்த செனவிரத்ன மற்றும் சுஜிவ் சென்ரா சமரநாயக்க அடகு வைப்பாளராக புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், கொமர்ஷல் பேங்க் ஒப் பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

1 ஆவது ஆதன இடாப்பு- 2022, பெப்புருவரி மாதம் 09ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு

2 ஆவது ஆதன இடாப்பு- 2022, பெப்புருவரி மாதம் 09ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**.- 2019.08.23ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2019.10.08 ஆந் திகதிய ''திவயின'', ''டெயிலி நியூஸ்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும். விற்பனை செய்யும் அறிவித்தலுக்காக 2019.11.22 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''திவயின'', ''டெயிலி நியூஸ்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம் :**

1 ஆவது ஆதன இடாப்பு.- பன்னிப்பிட்டியவில் இருந்து 700 மீற்றர் வரை பொரல்ல வீதியூடாக பயணம் செய்யும் பொழுது பன்சலைக்கு எதிராக உள்ள 13-15 அடிஅகல கொங்கிறீட் பாதைக்குத் திரும்பி 25 மீற்றர் வரை சென்று வீதியூடாக பயணம் செய்யும் பொழுது இடது பக்கத்தில் ஒன்றிணைந்துள்ள மதிப்பீட்டாளர் செய்யப்பட்ட காணியை அடையலாம்.

2 ஆவது ஆதன இடாப்பு.- ஹொரண நகர மத்தியிலிருந்து ஹொரண இரத்தினபுரி பாதையூடாக 7.6 கிலோமீற்றர் வரை பயணம் செய்யும் பொழுது வலது பக்கத்தில்

